**செய்தி வெளியீடு எண்: 183** **நாள்: 16.03.2013**

<u>செய்தி வெளியீடு</u>

பழைமை பாதுகாக்கப்பட வேண்டும். புதுமை போற்றப்பட வேண்டும். நமது பண்டைய செறிவான கலாச்சாரம், பண்பாடு மற்றும் கட்டடக்கலை திறமைக்குச் சான்றாக புராதன நகரங்கள் திகழ்கின்றன. இப்பகுதிகளை பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. திட்டமிடப்படாத நகர்ப்புற பரவலின் காரணமாக சுற்றுச்சூழல் சீர்க்கேட்டிலிருந்து புராதனப் பகுதிகளை பாதுகாக்கும் நோக்குடனும், சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடனும், தெரிவு செய்யப்பட்ட நகரங்களை புராதன நகரங்களாக அரசு அவ்வப்போது அறிவிப்பு செய்து வருகிறது. இப்புரதான நகரங்களின் வளர்ச்சிக்காக மேம்பாட்டுத் திட்டங்களை நகர ஊரமைப்பு ஆணையரகம் தயாரிப்பதுடன், நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமும் வழங்குகிறது.

தமிழகத்தில் முதன்முதலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் 1993 ஆம் ஆண்டு முதலில் 23 நகரங்கள் புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்டது. பின்னர் 1994 ஆம் ஆண்டு மேலும் 15 நகரங்கள் புராதன நகரங்களாகவும், 2009-ஆம் ஆண்டு ஒரு நகரம் புராதன நகரமாக அறிவிக்கப்பட்டது. இதுவரை தமிழகத்தில் 39 நகரங்கள் புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புரதான நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் நகர ஊரமைப்பு ஆணையரகத்தால் தயாரிக்கப்படுகிறது. இதுதவிர இந்த வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்த நகர ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக 50 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்ற ஆண்டு இந்த மானியத்தை 1 கோடி ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டார்கள்.

தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மன்னார்குடி, நாமக்கல், மயிலாடுதுறை, தென்திருப்பேரை, ஆழ்வார்திருநகர், பெருங்குளம், திருக்கோயிலூர், ஸ்ரீமுஷ்ணம், தாரமங்கலம், திருப்பரங்குன்றம், சோளிங்கர், சென்னிமலை, திருவட்டாறு, சுசீந்திரம் மற்றும் கொடுமுடி ஆகிய 15 நகரங்களை புராதன நகரங்களாக அறிவிப்பு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இதனுடன் சேர்த்து தமிழகத்தில் தற்பொழுது 54 நகரங்கள் புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்நகரங்களுக்கான வளர்ச்சி திட்டங்களை நகர ஊரமைப்பு ஆணையரகம் தயாரிப்பதுடன், நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து 1 கோடி ரூபாய், ஒவ்வொரு புராதன நகரத்திற்கான வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்த மானியமாக வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

********

வெளியீடு :- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 16.3.2013.